செய்தி வெளியீடு எண்: 421 நாள் : 05.08.2013

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக, ஒகேனக்கல் வெள்ளப்பெருக்கில் சிக்கி பரிதவித்த தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மாதப்பன், திரு. ராமகிருஷ்ணன், திரு. முத்து மற்றும் திரு. சகாதேவன் ஆகிய நான்கு நபர்கள் இரண்டு விமானப்படை ஹெலிகாப்டர்கள் உதவியுடன் பத்திரமாக இன்று (5.8.2013) மீட்கப்பட்டனர்.

கடந்த சில நாட்களாக காவேரி நீர்பிடிப்புப் பகுதியில் பெரு மழை பெய்து வருவதன் காரணமாக, கர்நாடக அணைகளிலிருந்து அதிகளவில் நீர் திறந்து விடப்படுகிறது. எனவே, ஒகேனக்கல் நீர் அருவிப் பகுதியில் குளிக்கத் தடை விதித்ததுடன் அந்தப் பகுதியை மாவட்ட நிர்வாகம் கண்காணித்து வருகிறது. தாழ்வான பகுதியிலிருந்து மக்களும் மேடான பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் **4.8.2013** அன்று தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பண்டஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. துரைராஜ் என்பவரின் மகன் திரு. மாதப்பன் ஒகேனக்கல் பகுதியில் காவேரி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டு பின்னர் மரக்கிளையில் தொற்றிக் கொண்டார். இதனை அறிந்தவுடன், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை உதவியுடன் திரு.மாதப்பனைக் காப்பாற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. இதற்கிடையில், தன்னிச்சையாக இவரைக் காப்பாற்ற ஊட்ட மலையைச் சேர்ந்த பரிசல் ஓட்டிகள் திரு. மாதவன் என்பவரின் மகன் திரு. ராமகிருஷ்ணன், திரு. கோவிந்தன் என்பவரின் மகன் திரு. முத்து, திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு. சகாதேவன் ஆகியோர் ஒரு பரிசலில் சென்றனர். இருப்பினும், வெள்ளப்பெருக்கில் பரிசலை இயக்க முடியாமல் ஆற்றின் குறுக்கே உள்ள தீவு போன்ற மேடான பாறை மற்றும் மரங்களுக்கு இடையில் இந்த மூவரும் ஒதுங்கினர்.

இந்தச் செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேசிய பேரிடர் மேலாண்மை மீட்புப் பணிக்குழு உதவியுடனும், இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் மூலமும் நால்வரையும் மீட்பதற்கான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.

இதனையடுத்து, இவர்களை மீட்பதற்காக அரக்கோணத்திலிருந்து தேசிய பேரிடர் மேலாண்மை மீட்புப் பணிக் குழுவினர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். அக்குழுவை சேர்ந்த **47** நபர்கள் **4.8.2013** நள்ளிரவில் சம்பவ இடத்தை வந்தடைந்தனர். அந்த சமயத்தில் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு அதிகமாக இருந்ததால், மீட்புப் பணியில் சிக்கல் நீடித்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி கோயம்புத்தூர் மாவட்டம், சூலூரிலிருந்து இந்திய விமானப் படைக்கு சொந்தமான இரண்டு ஹெலிகாப்டர்கள் வரவழைக்கப்பட்டு மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இதன் விளைவாக, ஒகேனக்கல் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த திரு. மாதப்பன், பரிசல் ஓட்டிகள் திரு. ராமகிருஷ்ணன், திரு. முத்து, திரு. சகாதேவன் ஆகிய நால்வரும் இன்று **(5.8.2013)** காலை பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் மீட்கப்பட்டனர். இவர்கள் நால்வரும் மருத்துவ சிகிச்சைக்காக பென்னாகரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

காவேரி வெள்ளப் பெருக்கில் சிக்கிய தங்களைக் காப்பாற்ற அதி விரைவாக நடவடிக்கை எடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு உயிர் பிழைத்த நால்வரும், அவர்தம் உறவினர்களும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்:5.8.2013.